## மார்ச் - 22 - வியாழன்

தூய மரிய ஜோசபா

" ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள் அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்"
(தி.பா.105: 4)

**முதல் வாசகம் : தொடக்க நூல் 17 : 3 – 9**

அப்பொழுது ஆபிராம் பணிந்து வணங்க, கடவுள் அவரிடம் கூறியது "உன்னுடன் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே் எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய். இனி உன்பெயர் ஆபிராம் அன்று "ஆபிரகாம்" என்ற பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஏனெனில் எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன். மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன் உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர். தலைமுறை தலை முறையாக உன்னுடனும், உனக்குப்பின் வரும் உன் வழிமரபினருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலை நாட்டுவேன். இதனால் உனக்கும் உனக்குப்பின் வரும் உன் வழி மரபினருக்கும் நான் கடவுளாக இருப்பேன். நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்" என்றார். மீண்டும் கடவுள் ஆபிரகாமிடம், "நீயும் தலைமுறை தோறும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரும் என் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார்

**நற்செய்தி : யோவான் 8 : 51 – 59**

அக்காலத்தில் இயேசு யாதர்களிடம் என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். யூதர்கள் அவரிடம், "நீ பேய் பிடித்தவன்தான் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினர்களும் இறந்தார்கள். ஆனால் என் வார்த்தையைக் கடைப் பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்கிறாயே! எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனோ? ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினரும் இறந்தனர். நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்றார்கள். இயேசு மறு மொழியாக, "நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அவரை உங்களுக்குத் தெரியாது எனக்குத் தெரியும். எனக்கு அவரைத் தெரியாது என நான் சொன்னால் உங்களைப்போல நானும் பொய்யனாவேன். அவரை எனக்குத் தெரியும். அவருடைய வார்த்தையையும் நான் கடைபிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார் அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்" என்றார். யூதர்கள் அவரை நோக்கி, "உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை் நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள் இயேசு அவர்களிடம், "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். இதைக் கேட்ட அவர்கள் அவர்மேல் எறியக் கற்களை எடுத்தார்கள். ஆனால் இயேசு மறைவாக நழுவிக் கோவிலிலிருந்து வெளியேறினார்.

**தியானம்:** கடவுள் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப்பற்றி முதல் வாசகம் கூறுகின்றது. ஆபிராம் என்ற பெயர் ஆபிரகாம் என்று மாற்றப்படுகின்றது. கடவுள் அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை ஆபிரகாம் ஏற்றுக்கொண்டு துணிவோடு ஒரு விசுவாசப் பயணத்தை மேற்கொள்கின்றார். அதனால்தான் இன்னும் விசுவாசத்தின் தந்தை என ஆபிரகாம் அழைக்கப்படுகின்றார். கடவுள் தான் செய்துகொண்ட உடன்படிக்கையின் மூலம் தாம் உறுதியாயிருப்பேன் என்றும், தனது நிறைவான செயல்களை ஆபிரகாமிற்கும், அவர் வழிமரபினருக்கும் கொடுப்பேன் என்று வாக்களிக்கின்றார். இவ்வாக்குறுதியின் மூலம் இயேசு வழியாக நாமும் உரித்துடையவாரகின்றோம். ஆகவேதான் நாமும் விசுவாச வாழ்விற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். எமது வாழ்விலும் துன்பங்கள், துயரங்கள் நெருக்கங்களை நாம் எதிர்கொள்ளும் பொழுது எமது விசுவாசத்தில் உறுதியாக இருக்க கடவுள் எம்மை அழைக்கின்றார். உலக காரியங்களுக்காக சில வேண்டுதல்களை கடவுள் முன் வைத்து அது நிறைவேறினால் மட்டும் விசுவசிக்கின்றேன் என்ற போக்கில் வாழ்வோமேயானால் அது அர்த்தமற்ற வாழ்வாகும். சோதனைகள் வரும்பொழுது சோர்ந்து விடாமல் அதை ஆண்டவர் நன்மைக்காக செய்ய வல்லவர் என நம்புவதே விசவாசம்.